**மார்ச் - 12**

**"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே". - 1தீமோ 1 : 5**

நமக்காகவும், நம்முடனும் செய்யப்படுகிற எல்லாத் தெய்வீக விவகாரங்களின் முடிவான நோக்கமும், நமக்குக் கொடுத்திருக்கிற எல்லாத் தெய்வீக வாக்குத்தத்தங்களின் முடிவான பொருளும், தெய்வீக சாயலான அன்பை விருத்தி செய்வதே. ஏனென்றால், தேவன் அன்பாகவே இருக்கிறார். இந்த உண்மையை நாம் நமது மனதின் முன் தெளிவாக வைத்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய கர்த்தர் கருதுகிற அளவிற்கும், அர்த்தத்திலும் நாம் இந்த அன்பை நம்மில் விருத்தி செய்யப்பட்டு வைத்திருக்க எதிராளியாகிய பிசாசானவனுக்கும் அவனது தன்னயத்தின் சட்டத்திற்கும் முற்றிலும் எதிராக, கர்த்தருக்கும் கர்த்தருடைய அன்பின் சட்டத்திற்கும் இசைவாக, அது சுத்தமான இருதயத்திலிருந்து வர அவசியமாகிறது. **-Z ’00, 360 (R 2733).**

பக்குவமான கிறிஸ்தவ குணத்தின் அழகான இலட்சணங்கள் தேவனுடைய குணத்தின் இலட்சணங்களைப் போல, ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவைகளைக் கொண்டதாக இருக்கின்றன. இந்த விசேஷ குணங்கள் ஒன்றை ஒன்று தாங்கி நிற்கும் போது, அவைகளின் மத்தியில் மிகவும் பிரகாசமாக பிரகாசிக்கின்ற ஒன்று அன்பு. மற்ற மூன்றின் நோக்கம் அதை அபிவிருத்தி செய்வதே. குண அபிவிருத்தியின் முடிவான இலக்கு ஞானம், நீதி, வல்லமை இவைகளுக்கு இசைவாகவும், இவைகளின் ஆதரவினாலும் இவைகளிலிருந்து பாய்ந்தோடுகிறதுமான தெய்வீக அன்பின் ஆதிபத்தியமாகும். **- P ’36, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 7:12; ரோம 13:8-10; யோவா 13:35; எபே 1:4; கலா 5:14; கொலோ 3:14; 1கொரி 13; யாக் 2:8; 1யோவா 3:18,19; 1பேது 1:22; 3:8; 4:8; எபி 9:14; அப் 15:8,9; 1கொரி 6:11; தீத் 3:5; பிலி 2:13

**கோபுர வாசிப்பு : Z '15, 261 (R 5755).**

**வினாக்கள் :** இந்த வசனம் எனக்குச் செய்தது என்ன? எப்படி? உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எது? எந்தச் சந்தர்ப்பங்களில்? அவற்றின் பலன்கள் என்ன?